செ. கு. எண்: 128 நாள்: 10.09.2016

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 10.9.2016

திருப்பூர் மாவட்டம், **திருமூர்த்தி அணையிலிருந்து** பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில், பாலாறு பழைய ஆயக்கட்டு பாசனமான தளி வாய்க்கால் பாசனம் மற்றும் பாலாறு படுகையின் இரண்டாம் மண்டலத்தில், நிலையிலுள்ள பயிர்களை காக்கும் பொருட்டு தண்ணீர் திறந்துவிடக் கோரி, தளி வாய்க்கால் வடபூதிநத்தம் பாசன விவசாயிகள் சங்கத்தினர் மற்றும் பாலாறு படுகை முன்னோடி உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, **திருமூர்த்தி அணையிலிருந்து** பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில், பாலாறு பழைய ஆயக்கட்டு பாசனமான தளி வாய்க்கால் பாசனம் மற்றும் பாலாறு படுகையின் இரண்டாம் மண்டலத்தில், நிலையிலுள்ள பயிர்களை காக்கும் பொருட்டு **11.9.2016** முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சி வட்டம் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள உடுமலைப்பேட்டை, பல்லடம், திருப்பூர், காங்கேயம் மற்றும் தாராபுரம் வட்டங்களிலுள்ள மொத்தம் **96,987 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.